# பகுதி IV(அ) — மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண சபை

1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி (திருத்த) நியதிச் சட்டம்

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் (1) ஆம் இலக்க பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் பிரதான அமைச்சரும் நிதி, நீதி, சமாதானம், பிரதேச நிருவாகம், திட்டமிடல், காணி, உள்ளூராட்சி, கல்வி அமைச்சருமாகிய வீரசூரிய திசாநாயக்க முதியன்சேலாகே புஞ்சிபண்டா திசாநாயக்க ஆகிய நான், மத்திய மாகாண சபையின் 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி (திருத்த) நியதிச் சட்டம் 1991.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறையிலிருக்க வேண்டும் என இத்தால் உத்தரவு பிறப்பிக்கின்றேன்.

டப்ளிவ். டீ. எம். பி. பீ. திசாநாயக்க,<br>
பிரதான அமைச்சரும், நிதி, நீதி,<br>
சமாதானம், பிரதேச நிருவாகம்,<br>
திட்டமிடல்; காணி, உள்ளூராட்சி, கல்வி<br>
அமைச்சரும் — மத்திய மாகாண சபை.

கண்டி,<br>
1994.02.03.

1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மத்திய மாகாண நிதி (திருத்த) நியதிச் சட்டம்
1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு நியதிச் சட்டம்

மத்திய மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இந் நியதிச் சட்டம் 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மத்திய மாகாண நிதி (திருத்த) நியதிச் சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.



1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்தின் விசிவுப் பெயரைத் திருத்துதல்.

2. 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்தின் விசிவுப் பெயரானது, அதிற் காணப்படும், அத்துடன் " திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டம் " என்னும் சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டம், திருத்தப்பட்டவாறான உற்பத்திவரிக் கட்டளைச் சட்டம், திருத்தப்பட்டவாறான மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், திருத்தப்பட்டவாறான நகர சபைகள் கட்டளைச் சட்டம், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம். "

ஒவ்வாமை விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இந் நியதிச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

02—347/1